வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-சரவண குமார்

தேதி 14.8.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

நாட்டின் 78-ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, இன்று இரவு 7 மணிக்கு நாட்டு மக்களுக்கு உரையாற்ற உள்ளார்.

இந்தியா-பாகிஸ்தான் பிரிவினையால் பாதிக்கப்பட்ட மக்களின் துயரங்களை நினைவு கூறும் நாள் இது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

நாட்டின் விடுதலைக்காக இன்னுயிர் நீத்த வீரர்களை பெருமையுடனும், தேசப் பற்றுடன் நினைவு கூர்வதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறி உள்ளார்.

தேச பிரிவினை கொடுஞ்செயல்கள் தினம் இன்று கடைபிடிக்கப்படுவதை ஒட்டி, தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி கண்காட்சி ஒன்றை தொடக்கி வைத்தார்.

புதுச்சேரியில் புதிய குடும்ப அட்டை விண்ணப்பித்தவர்களுக்கு விரைவில் அட்டை வழங்கிட நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதலமைச்சர் திரு ரங்கசாமி, கூறி உள்ளார்.

*சுதந்திர தினம்*

நாட்டின் 78-ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, குடியரசு

தலைவர் திருமதி திரவுபதி முர்மு, இன்று இரவு 7 மணிக்கு நாட்டு

மக்களுக்கு உரையாற்ற உள்ளார். இந்த உரை ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷனின் அனைத்து அலைவரிசைகளிலும் இந்தி மற்றும் ஆங்கில மொழிகளில் ஒலிபரப்பாக உள்ளது. குடியரசு தலைவர் உரையின் தமிழாக்கத்தை இன்று இரவு மணி 9.30 -க்கு மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும். குடியரசு தலைவர் உரையை அடுத்து வழக்கமாக இரவு மணி 7.15 க்கு ஒலிபரப்பாகும் ஆகாஷ்வாணி செய்தி அறிக்கை இன்று இரவு 8 மணிக்கு ஒலிபரப்பாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திர தினம் நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி, புதுடெல்லியில் உள்ள செங்கோட்டையில் பிரதமர் திரு நரேந்திர மோடி தேசியக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்ற உள்ளார். இந்த ஆண்டு சுதந்திர தினத்தின் கருப்பொருள் விக்சித் பாரத் @ 2047 என்பதாகும். இதனை முன்னிட்டு தலைநகரில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ராணுவம் மற்றும் துணை ராணுவப் படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும் சுதந்திர தினத்தன்று அணிவகுப்பு மற்றும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளன. இந்த சுதந்திர தினவிழாக் கொண்டாட்டங்களை நாளை காலை 7 மணி முதல் ஆகாஷ்வாணி நேரடி ஒலிபரப்பு செய்ய உள்ளது.சுதந்திர

தினத்தை முன்னிட்டு பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் ராணுவ வீரர்களிடையே உரையாற்றினார்.

*சுதந்திர தின-விருந்தினர்*

புதுடெல்லி செங்கோட்டையில் நாளை நடைபெற உள்ள சுதந்திர தின விழாவில் பங்கேற்க நாடு முழுவதிலும் இருந்து சுமார் 6 ஆயிரம் சிறப்பு விருந்தினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தேசத்திற்காக குறிப்பிடத் தக்க பங்களிப்பை வழங்கிய தனித்துவமான பிரிவுகளை சேர்ந்த 24 பேர் சிறப்பு விருந்தினர்களாக கவுரவிக்கப்பட உள்ளனர்.

விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ் பயன் அடைந்த 250 விவசாயிகள், பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் 250 பயனாளிகள், உழவர் உற்பத்தியாளர்கள் அமைப்புகளின் 500 பிரதிநிதிகள், கிராமப்புற மற்றும் அடிப்படை சுகாதார சேவைகளை வழங்கும் 150 சமூக சுகாதார ஆர்வலர்கள், கிராம பஞ்சாயத்துக்களில் இருந்து 300 பெண் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் சிறப்பு அழைப்பாளர்களாக சுதந்திர தின விழாவில் பங்கேற்க உள்ளனர்.

ஏகலைவா மாதிரி உரைவிடப் பள்ளிகளைச் சேர்ந்த 150 மாணவர்கள், 100 பழங்குடியின கலைஞர்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் நல குழுவின் 300 பெண் தொழிலாளர்கள், நாட்டு நலப் பணித் திட்டத்தின் 400 தன்னார்வலர்கள் மற்றும் 2024 பாரீஸ்

ஒலிம்பிக்கில் பங்கேற்ற வீரர்கள், இவ்விழாவின் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்ள உள்ளனர்.

விருதுகள்

சுதந்திர தினத்தை முன்னிட்டு, காவல்துறை, தீயணைப்பு, ஊர்க்காவல் படை, குடிமை பாதுகாப்பு மற்றும் சீர்திருத்த பணிகள் உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்த ஆயிரத்து 37 பணியாளர்களுக்கு வீர தீர செயல்களுக்கான பதக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. குடியரசு தலைவர் பதக்கம், தெலங்கானா காவல்துறையின் தலைமை காவலர் திரு சதுவு யாதய்யாவிற்கு வழங்கப்படுகிறது. குடியரசு தலைவரின் பதக்கம் அந்தந்த துறைகளைச் சார்ந்த சிறப்பான சேவைக்காக வழங்கப்படுகிறது.

வீரதீர செயல்களுக்கான பதக்கம் 213 பேருக்கு வழங்கப்பட உள்ளதாக உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. சிறப்பு சேவைக்கான 94 குடியரசு தலைவர் பதக்கங்களில், 75 பதக்கங்கள் காவல் துறைக்கும், 8 பதக்கங்கள் தீயணைப்பு துறைக்கும், 8 பதக்கங்கள் சிவில் பாதுகாப்பு மற்றும் ஊர்க்காவல் படைக்கும், 3 பதக்கங்கள் சீர்திருத்த சேவைகளுக்கும் வழங்கப்பட உள்ளன. மேலும் 279 பணியாளர்களுக்கு பாராட்டத் தக்க பணிக்கான பதக்கம் வழங்கப்பட உள்ளன.

*பாகிஸ்தான்-பிரிவினை*

இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் 1947-ஆம் ஆண்டு இதேநாளில் பிரிக்கப்பட்டதால், பாதிக்கப்பட்ட மக்களின் துயரங்களை நினைவு கூறும் நாள் இது என்று பிரதமர் திரு நரேந்திர மோடிகூறி உள்ளார். நாட்டில் ஒற்றுமை மற்றும் சகோதரத்துவத்தின் பிணைப்புகளை பாதுகாப்பதில் தேசத்தின் உறுதிப்பாட்டை வலியுறுத்தி பிரதமர் தமது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார். தேசப் பிரிவினையால் உயிரிழந்த அனைவருக்கும் அஞ்சலி செலுத்தும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு 14-ஆம் தேதி அவர்களின் தியாகங்களை நினைவு கூறும் நாளாக அனுசரிக்கப்படுகிறது.

இந்நாளை ஒட்டி உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில், இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் பிரிக்கப்பட்ட போது லட்ச கணக்கான மக்கள் தங்கள் உறவுகளையும், இன்னுயிரையும் தியாகம் செய்து, சொந்த மண்ணையும், வீட்டையும் இழந்துள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரிவினை துயர தினத்தை ஒட்டி, தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் விடுத்துள்ள செய்தியில் தங்கள் சொந்த மண்ணில் இருந்து பிரிக்கப்பட்டதால், பல இன்னல்களை அனுபவித்த

மக்களை இந்த நாளில் நினைவு கூர்வோம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

*முர்மு-கோடை விழா*

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு அம்ரித் உதயம்-தோட்டத்தின் கோடைக்கால விழாவை ஒட்டி குடியரசு தலைவர் மாளிகையில் இன்று தொடங்கி வைத்தார். இந்த அம்ரித் தோட்டத்தை பொது மக்கள் வரும் வெள்ளிக் கிழமை முதல் செப்டம்பர் மாதம் 15-ஆம் தேதி வரை பார்வையிட அனுமதிக்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இம்மாதம் 29-ஆம் தேதி தேசிய விளையாட்டு தினத்தை ஒட்டி, விளையாட்டு வீரர்கள் குடியரசு தலைவர் தோட்டத்தை பார்வையிட முதன் முறையாக அழைக்கப்பட்டுள்ளனர்.

*ஹர்கர் திரங்கா*

நாட்டின் விடுதலைக்காக இன்னுயிர் நீத்த வீரர்களை பெருமையுடனும், தேசப் பற்றுடன் நினைவு கூர்வதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறி உள்ளார். தேசத்தின் பெருமிதம், ஒற்றுமை, நேர்மை, நம்பிக்கையை முன்னெடுத்துச் செல்லும் வகையில் இந்த இல்லந்தோறும் தேசியக் கொடி ஏற்றும் இயக்கம் நடைபெறுவதாகவும் அவர் கூறினார். இன்று அவரது இல்லத்தில் மூவர்ணக் கொடியை ஏற்றி, நாட்டு மக்களிடையே தேச பக்தி உணர்வை

வலுப்படுத்தும் வகையில் நாடு முழுவதும் இந்த பிரச்சாரம் நாளை வரை நடைபெறும் என்று கூறி உள்ளார். தகவல்-ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் புதுடெல்லியில் உள்ள தமது இல்லத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து அதனை சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார். தேசத்தின் உணர்வுகளை உள்ளடக்கி வைத்துள்ள தேசியக் கொடியை நாட்டு மக்கள் தங்கள் இல்லங்களில் ஏற்றி வைத்து கொண்டாடுவோம் என்று தெரிவித்துள்ளார்.

நாட்டு பற்றை மக்களிடையே வளர்க்கும் நோக்கில் கடந்த 9-ஆம் தேதி முதல் நாளை வரை நடைபெறும் இந்த இயக்கத்தில் மக்கள் மிகுந்த உற்சாகத்துடன் பங்கேற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது.

*தமிழகம்-ஆர்என் ரவி*

தேச பிரிவினை கொடுஞ்செயல்கள் தினம் இன்று கடைபிடிக்கப்படுவதை ஒட்டி, சென்னை ஆளுநர் மாளிகையில் தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி கண்காட்சி ஒன்றை தொடக்கி வைத்தார். இந்தக் கண்காட்சியை பிராந்திய மத்திய தகவல் தொடர்பு பணியகம் ஏற்பாடு செய்துள்ளது. இக்கண்காட்சியை பள்ளி-கல்லூரி மாணவர்கள் நாட்டு நலப் பணித் திட்ட தொண்டர்கள் உள்ளிட்ட பலர் பார்வையிட்டனர். இந்தியா-பாகிஸ்தான் பிரிவினை வாதத்தின் போது இந்தியர்கள் எதிர்கொண்ட துயரங்கள் மற்றும் கொடூர சம்பவங்கள்

குறித்த புகைப்படங்கள், வரை படங்கள் மற்றும் காணொளி விளக்க காட்சிகள் இதில் இடம் பெற்றுள்ளன.

*ரங்கசாமி-வாழ்த்து*

இந்திய திருநாட்டின் 78-ஆவது சுதந்திர திருநாளை சிறப்பாக கொண்டாடி மகிழும் இந்த வேளையில் புதுச்சேரி மாநில மக்கள் அனைவருக்கும் சுதந்திர தின வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாக முதலமைச்சர் திரு ரங்கசாமி கூறி உள்ளார். நாட்டின் விடுதலைக்காக போராடிய எண்ணற்ற வீரர்களின் தீரத்தை எதிரொலிக்கும் இந்த நன்னாளில் விடுதலைக்காக உடல், பொருள் ஆவி என அனைத்தையும் ஈந்த அறியப்பட்ட மற்றும் அறியப்படாத விடுதலைப் போராட்ட வீரர்களின் தியாகத்தையும் நினைவு கூர்ந்து நன்றி செலுத்துவது நம் ஒவ்வொருவரது கடமையாகும் என்று கூறினார்.

இல்லம் தோறும் மூவர்ணக் கொடியை ஏற்றி வீர மறவர்களின் தியாகத்திற்கு நன்றி செலுத்துவதில் பெருமை கொள்கிறேன் என்று தெரிவித்தார். தேசத்தின் குடிமக்கள் சமத்தும், மற்றும் சகோதரத் துவம் ஆகிய கொள்கைகளை மனதில் கொண்டு ஒன்றுபட்ட இந்தியாவின் பன்முகத் தன்மையே நமது பலம் என்று தமது சுதந்திர தின வாழ்த்துச் செய்தியில் கூறி உள்ளார்.

*புதுச்சேரி-சட்டப் பேரவை*

புதுச்சேரியில் புதிய குடும்ப அட்டை விண்ணப்பித்தவர்களுக்கு விரைவில் அட்டை வழங்கிட துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதலமைச்சர் திரு ரங்கசாமி, எதிர்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கையில் கூறினார்.

சிகப்பு நிற அட்டை உள்ளவர்களுக்கு அனைத்து பயன்களும் கிடைக்கும் என்றும், தகுதியானவர்களுக்கு மட்டுமே சிகப்பு அட்டை வழங்குவதற்கான நடவடிக்கை முறைப்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார். ஆதிதிராவிடர் நலத்துறைக்கு அதிக நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், சிறப்பு கூறு நிதியும் ஒதுக்கப்பட்டதாகவும் முதலமைச்சர் கூறினார். மாணவர்களுக்கு ஜாதி சான்றிதழ் வழங்கும் முறை எளிதாக்கப்படும் என்றும், உயர்நீதி மன்ற உத்தரவுப்படி தாய் வழி ஜாதி சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் முதலமைச்சர் திரு ரங்கசாமி அறிவித்தார்.

*புதுச்சேரி-சட்டப் பேரவை*

வஃக்பு வாரிய சட்ட திருத்த மசோதாவிற்கு தமிழகத்தில் எதிர்ப்பு தெரிவித்துள்ளதை சுட்டிக்காட்டிய திமுக, காங்கிரஸ் உறுப்பினர்கள் புதுச்சேரியிலும் அதே போன்ற தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று

வலியுறுத்தினர். இதற்கு முதலமைச்சர் திரு ரங்கசாமி எந்த பதிலும் தெரிவிக்காததால் எதிர்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் என அரசு தீர்மானம் சட்டமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் என மத்திய அரசை நேரில் வலியுறுத்த உள்ளதாகவும், பிற கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்து வேண்டுகோள் வைக்க உள்ளதாகவும் முதலமைச்சர் திரு ரங்கசாமி கூறினார்.

இதைத் தொடர்ந்து கடந்த மாதம் 31-ஆம் தேதி துணை நிலை ஆளுநரின் உரையுடன் தொடங்கி 11 நாட்கள் நடைபெற்ற கூட்டத் தொடரை சட்டப் பேரவைத் தலைவர் திரு செல்வம் மறுதேதி குறிப்பிடப் படாமல் ஒத்தி வைத்தார்.

புதுச்சேரி-எதுவார் குபேர்

நகர தந்தை எதுவார் குபேர் அவர்களின் நினைவு நாள் இன்று புதுச்சேரி அரசு சார்பில் அனுசரிக்கப்பட்டது. இதனை ஒட்டி பாரதி பூங்காவில் அமைந்துள்ள அவரது திருவுருச் சிலைக்கு பொதுப் பணித் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், சட்டப் பேரவை துணைத் தலைவர் திரு ராஜவேலு, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு பாஸ்கர் என்கிற

தட்சிணாமூர்த்தி, திரு யு லட்சுமிகாந்தன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

*சுதந்திர தினம்-தமிழ்நாடு*

சுதந்திர தினத்தை முன்னிட்டு சென்னை, கோட்டை கொத்தளத்தில் தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் நாளை தேசியக் கொடியை ஏற்றி உரையாற்ற உள்ளார். இதை ஒட்டி புனித ஜார்ஜ் கோட்டை மற்றும் அதனை சுற்றி உள்ள பகுதிகளில் 5 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளன. 9 ஆயிரம் காவல் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் சென்னையில் முக்கிய பகுதிகளில் தீவிர கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இவ்விழாவில் தகைசால் தமிழர் விருது, டாக்டர் ஏபிஜே அப்துல்கலாம் விருது, கல்பனா சாவ்லா விருது, முதலமைச்சரின் நல் ஆளுமை விருது, சிறந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான முதலமைச்சர் விருது உள்ளிட்ட பல்வேறு விருதுகளையும் தமிழக முதலமைச்சர் வழங்க உள்ளார்.

*செயற்கை கோள்*

புவி கண்காணிப்பிற்கான EOS-08 செயற்கை கோள் ஸ்ரீஹரி கோட்டா சத்தீஸ்தவான் விண்வெளி மையத்தில் இருந்து நாளை விண்ணில் செலுத்தப்பட உள்ளதாக இருந்த நிலையில் நிர்வாக

காரணங்களுக்காக நாளை மறுநாள் காலை மணி 9.17 -க்கு சிறிய ரக SSLV- D3 ராக்கெட் மூலம் விண்ணில் ஏவப்பட உள்ளது என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

நாட்டின் 78-ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, இன்று இரவு 7 மணிக்கு நாட்டு மக்களுக்கு உரையாற்ற உள்ளார்.

இந்தியா-பாகிஸ்தான் பிரிவினையால் பாதிக்கப்பட்ட மக்களின் துயரங்களை நினைவு கூறும் நாள் இது என்று பிரதமர் திரு நரேந்திர மோடிகூறி உள்ளார்.

நாட்டின் விடுதலைக்காக இன்னுயிர் நீத்த வீரர்களை பெருமையுடனும், தேசப் பற்றுடன் நினைவு கூர்வதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறி உள்ளார்.

தேச பிரிவினை கொடுஞ்செயல்கள் தினம் இன்று கடைபிடிக்கப்படுவதை ஒட்டி, தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி கண்காட்சி ஒன்றை தொடக்கி வைத்தார்.

புதுச்சேரியில் புதிய குடும்ப அட்டை விண்ணப்பித்தவர்களுக்கு விரைவில் அட்டை வழங்கிட நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதலமைச்சர் திரு ரங்கசாமி, கூறி உள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

---------------------------------